மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம் நாமக்கல்
சேந்தமங்கலம் ஊராட்சி ஒன்றியம்

நாமக்கல் மாவட்டம், சேந்தமங்கலம் வட்டம், சேந்தமங்கலம் ஊராட்சி ஒன்றியம், பொட்டணம் ஊராட்சி/கிராமம், ச.எண்:94/1B2A,94/1B2B-ல் அமையும் உத்தேச குடிமிருப்பு மனைப்பிரிவிற்கான தொழில்நுட்ப ஒப்புதல் வரைபடம்.

அளவு : 1அங்குலம் = 33அடி (1:400)

இணையதள எண்: NKL / 0UDJW9IE / 42252 / 2025

குறிப்பு:

மனைப்பிரிவின் பரப்பு : 0.63¼ ஏக்கர் (அ) 2559.64 ச.மீ
கோரிய மனைகள் : 10
ஒதுக்கிய மனைகள் : 10
மனைப்பிரிவு சாலையின் பரப்பு : 846.50 ச.மீ
மனைப்பிரிவு எல்லை
நிலையிலுள்ள சாலை

பொது ஒதுக்கீடுகள்

(அரசாணை எண்:18 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 04.02.2019-ன் படி 10% பூங்கா பரப்பு 172.00 ச.மீ-க்கு அரசு வழிகாட்டு மதிப்பீட்டு தொகையாக செலுத்தப்பட்டுள்ளது.)
(மனுதாரரால் உள்ளாட்சிக்கு தானப்பத்திரம் மூலம் ஒப்படைக்கப்பட்டவை.)

மின் பகிர்மான பரப்பளவு	10.66 ச.மீ	= 0.62%
பொது உபயோகம் பரப்பளவு	10.32 ச.மீ	= 0.60%
உத்தேச மனைப்பிரிவு சாலை	846.50 ச.மீ	


மூலை முடக்கு : 12.00மீ அகல சாலைகள் வரை 1.50மீx1.50மீ விடப்படல் வேண்டும்.

நிபந்தனைகள்:

1. இம்மனைப்பிரிவிற்கு உள்ளாட்சி இறுதி ஒப்புதல் அளிக்கும்முன் இடத்தினை எந்தத்துறையாலும் நில ஆர்ஜித நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை என்றும், எந்த துறைக்காகவும் நில ஆர்ஜிதப்பட்டியல் மாவட்டவருவாய் அலுவலருக்கு அனுப்பப்பட வில்லை என்றும், உள்ளாட்சி தலைவர் உறுதி செய்து கொள்ள வேண்டும்..
2. அரசாணை எண் 71 ஊரக வளர்ச்சி துறை நாள் 16.06.2003 ல் தெரிவிக்கப்பட்டுள்ளதன் அடிப்படையில் நில உரிமம் குறித்து உள்ளாட்சி நிர்வாக அதிகாரி முழுத்திருப்தியில் உள்ளது என சான்று அளித்துள்ளதன் பேரில் இம்மனைப்பிரிவிற்கு தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.
3. அரசாணை எண் 18-ன் நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர் வழங்கல் துறை நாள் 4.2.2019-ன் படி உள்ள நிபந்தனைகளை கடைப்பிடிக்க வேண்டும்.
4. நில உரிமம் குறித்து வழங்கப்பட்ட சான்றுகள் மற்றும் பரிசீலனைக்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவையல்ல என்று அறியப்பட்டாலோ அல்லது மனைப்பிரிவுக்கு தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கியதால் பாதிப்பு ஏற்படக்கூடிய சூழ்நிலை ஏற்படின் மனைப்பிரிவுக்கு வழங்கப்பட்ட தொழில்நுட்ப ஒப்புதல் எவ்வித முன்னறிவிப்பும் இன்றி நகர் ஊரமைப்பு ஆணையர் அவர்களால் ரத்து செய்யப்படும்.
5. விற்பனைக்குண்டான மனைகளை விற்பனை செய்யும் போது இவ்வாணையின் நகலோடு நகர் ஊரமைப்புத்துறையில் ஒப்புதல் அளிக்கப்பட்ட வரைபட நகல் மனை வாங்குபவர்களுக்கு கட்டாயம் வழங்கப்பட வேண்டும்.
6. நகர் ஊரமைப்புத் துறை சட்டப்பூர்வமாக தொழில்நுட்ப அனுமதி அளிப்பதன் மூலம் விண்ணப்பதாரரின்பேரில் உள்ள நில உரிமையை உறுதிப்படுத்தவில்லை தொழில்நுட்ப அனுமதி திட்ட அனுமதி அளிப்பதற்கு முன்பு விண்ணப்பதாரரின் விண்ணப்பத்துடன் சமர்பித்த ஆவணங்களில் (கிரையப்பத்திரம் – குத்தகை பத்திரம் – பட்டா – தானப்பத்திரம் – பொது அதிகார பத்திரம் மேலும் பல) விண்ணப்பதாரர் வளர்ச்சி செய்ய உரிமை உள்ளதா என்று பார்க்கப்படுகிறது. சொத்தினை வாங்க விரும்பும் எந்த நபரும் விண்ணப்பதாரருக்கு சொத்தின்மீது உள்ள உரிமையை தனியாக உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். மேலும் அதன் மேல் வேறு யாரேனும் தனி நபர் உரிமை கோரினால் அவர்கள் அதனை பொருத்தமான தகுதியுள்ள நீதிமன்றத்தின் முன் தீர்த்துக்கொள்ளலாம். இதனை முடிவு செய்ய நகர் ஊரமைப்புத் துறை பொருத்தமான அமைப்பு அல்ல.
7. ஒப்புதல் அளிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தை எந்த வித மாற்றம் விடுதலின்றி மனைப்பரிவு நுழைவாயிலில் 6' x 4' அளவிலான நிரந்தர தகவல்பலகை மூலம் பொதுமக்கள் பார்வைக்கு நிரந்தரமாக பிரகரிக்கப்பட வேண்டும்
8. நீதிமன்ற வழக்கு ஏதேனும் நிலுவையில் இருப்பின் இத்துறையின் மனைப்பிரிவு அனுமதி செல்லத்தக்கது அல்ல.
9. உத்தேச மனைப்பிரிவின் ஊடே HT Line, LT Line மற்றும் Telephone Line செல்லுமாயின் சாலையின் போக்கிற்கு ஏற்றவாறு அதனை மாற்றியமைக்கப்பட வேண்டும்.
10. உத்தேச மனைப்பிரிவின் ஊடே நீர்நிலைகள் செல்லுமாயின் அதற்கு பாதிப்பு ஏற்படாதவாறு கட்டிடங்கள் கட்டப்பட வேண்டும்.

APPROVAL No: SWP/ DTCP/ NAMAKKAL/ LAYOUT No: 60 / 2025

உதவி இயக்குநர்
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்
நாமக்கல்



Signature valid
Signed by: Assistant Director
Location:Namakkal
Date:2025.03.13 17:50:01

Signature valid
Signed by: Village Panchayat President
Location:Namakkal
Date:2025.05.20 08:44